## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| L.A.O.P. No. 132/2021 | Date : 24.03.2023 | PW1 |
|---|---|---|
| Name: பழனியப்பன் | S/o. **முத்துகவுண்டர்** | |
| Evidence Recorded Time: 12.00 P.M. to 12.20 P.M. | | |

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-**

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பக்கத்து நிலத்தை விட என் நிலத்திற்கு வழங்கிய தொகை குறைவு என்பதால் தொகையை மறு நிர்ணயம் செய்து கொடுக்கவேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய நிலத்தின் சர்வே எண்.219/2 ஏ ஆகும். மேற்படி சொத்து என் அப்பா சம்பாதித்த சொத்தாகும். அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய நிலத்தை அரசானது கருப்புரெட்டியூர் சாலையை விரிவு படுத்துவதற்காகவும், பொது மக்கள் பயன்பாட்டிற்காகவும் எடுத்துக்கொண்டார்கள். அது சம்மந்தமாக எனக்கு அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. நில எடுப்பு அதிகாரியிடம் என்னுடைய ஆவணங்களை சமர்ப்பித்தேனா என்றால் சமர்பித்தேன். நானும் ரோட்டை போடுவதற்காக தான் முன்வந்து கொடுத்தேன் என்றால் கூடுதல் தொகை கொடுப்பதாக சொன்னதால் கொடுத்தேன். சர்வே எண்.219/2 ஏ நிலத்தில் 300 சதுர மீட்டர் நிலத்தை கையப்படுத்துவதாக தான் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரிதான். என்னை போல மற்றவர்களும் நிலத்தை எடுத்தற்காக தொகையை பெற்றுக்கொண்டார்கள் என்றால் அவர்கள் சதுர மீட்டருக்கு ரூ.1800/- கணக்கீடு செய்து கொடுத்துவிட்டார்கள், ஆனால் எனக்கு சதுரமீட்டருக்கு ரூ.66/- தான் கணக்கீடு செய்து கொடுத்தார்கள். மேற்படி ரூ.1800/- சதுர மீட்டர் கணக்கீடு செய்து கொடுத்ததற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னை போல பல பேர் நிலத்தை ஒப்படைத்து பணத்தை பெற்றுக்கொண்டார்கள் என்றும் அதேபோல் நானும் 300 சதுரமீட்டர் நிலத்தை ஒப்படைத்துவிட்டு பணம் பெற்றுக்கொண்டேன் என்றால் ஆட்சேபனையின் பேரில்தான் பணம் பெற்றுக்கொண்டேன். மேற்படி ஆட்சேபனையை ஆர்.டி.ஓ அவர்களிடம் எழுத்து பூர்வமாக சமர்ப்பித்தேன், அதனை இந் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த விதமான ஆட்சேபனையும் செய்யவில்லை என்றாலும், அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. அரசானது அன்றைய வழிகாட்டி மதிப்புப்படி அளந்து அதற்குண்டான சரியான தொகையை எனக்கு வழங்கியுள்ளார்கள் என்றால் ஆட்சேபனையின் பேரில் பெற்றுக்கொண்டேன். என்னுடைய வங்கி கணக்கு எண்ணை அலுவலகத்தில் கேட்டு இருந்தார்கள், அதனை நான் கொடுத்திருந்தேன். அந்த வங்கி கணக்கிற்குதான் அரசாங்கம் பணம் செலுத்தியது என்றால் சரிதான். நான் சொல்வது போல குறைவாக பணம் கொடுத்ததாக சொல்வது தவறு என்றாலும் அன்றைய அரசு வழிகாட்டி மதிப்பு படிதான் பணம் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. பக்கத்து நிலத்திற்கு அதிகமாக பணம் கொடுத்தார்கள் என்று நான் வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல, என்னுடைய நிலமானது அதிக மதிப்பீடு உள்ளது, இரண்டு ரோடு பிரியக்கூடிய நிலத்தில் என்னுடைய நிலம் உள்ளது, அது போக அந்த இடத்தில் பெரிய பெரிய கடைகளும் உள்ளது. மேற்படி சங்கதிகளை என்னுடைய வழக்குரையிலும், பிரமாண பத்திரத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி சங்கதிகளை என்னுடைய வழக்குரையிலும், பிரமாண பத்திரத்திலும் சொல்லாமல் தற்போது புது சங்கதிகளை கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிலம் தரிசு நிலம் என்றாலும், அது வானம் பார்த்த பூமி என்றாலும் சரிதான். எந்த ஒரு நிலத்தையும் அரசாங்கம் ஆர்ஜிதம் செய்யும் போது அதற்கான வழிகாட்டி மதிப்பீட்டையும், பக்கத்து நிலத்தையும் மதிப்பீடு செய்துதான் இழப்பீடு வழங்குகிறது என்றால் சரியல்ல. அரசாங்கம் சரியாக மதிப்பீடு செய்துதான் இழப்பீட்டு தொகை வழங்கியுள்ளது என்றால் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தற்போதும் ஒரே அரசு வழிகாட்டி மதிப்புபடிதான் விலை நிர்ணயம் செய்வார்கள் என்றாலும், என்னுடைய நிலத்திற்கு ஒரு மதிப்பீடும், பக்கத்து நிலத்திற்கு ஒரு மதிப்பீடும் செய்யமாட்டார்கள் என்றால் சரியல்ல. நான் அறிவிப்பை பெற்றுக்கொண்டு நில ஆர்ஜித அலுவலகம் சென்று அதனை ஒப்புக்கொண்டு பணத்தையும் பெற்றுக்கொண்டு தற்போது மனு தாக்கல் செய்து அதிக இழப்பீடு கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல, நான் பெற்ற பணம் ஆட்சேபனையின் பேரில்தான் பெற்றுக்கொண்டேன். அதிக இழப்பீடு பெறவேண்டும் என்றால் நீதிமன்றத்திற்கு சென்று முறையிடும்படி சொல்லிவிட்டார்கள். அதுபோல

அரசு தரப்பில் சொல்லப்படவில்லை என்றாலும், மனுவிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இழப்பீட்டை பொறுத்து அரசு கவனமாக பரிசீலனை செய்து தான் இழப்பீடு கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இழப்பீடு தொகை குறைவாக கொடுத்ததால் தான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். என் நிலத்திற்கு அருகில் இருந்தவர்கள் யாரும் இழப்பீடு அதிகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மற்றவர்கள் எல்லாம் சரியான தொகை என்று சம்மதித்து பெற்றுக்கொண்டார்கள் என்றாலும் நான் தான் அதிக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அரசு எல்லா வழிமுறைகளையும் ஆராய்ந்துதான் இழப்பீடு வழங்கியுள்ளார்கள் என்றாலும், இழப்பீடு தொகை நியாயமானதுதான் என்றாலும் சரியல்ல. எனக்கு இழப்பீடு போதாது என்று பக்கத்து நிலத்தை குறிப்பிட்டு அதிக இழப்பீடு கோருவது நியாயமானது இல்லை என்றால் சரியல்ல. தற்போது கொடுத்த இழப்பீட்டு தொகை நியாயமானது தான் என்றாலும் என்னுடைய கோரிக்கை ஏற்க்க தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நிலம் ஆர்ஜிதம் செய்யும் போது என்னோடு பல நபர்கள் எந்த விதமான ஆட்சேபனையும் இல்லாமல் இழப்பீடு பெற்றுக்கொண்டார்கள் என்றாலும் நான் தாக் அதிக இழப்பீடு கோருகிறேன் என்றாலும் சரியல்ல. ஒரே மாதிரியாகத்தான் அனைவருக்கும் நில மதிப்பீடு செய்யப்பட்டு இழப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்யததால் என்னுடைய மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை – இல்லை.**</u>

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியெனை ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.